ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 2366/24 – 2024 ජනවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.01.11
*2366/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 277/40*

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச்சட்டம்**

33 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி கே. ஏ. டி. ஆர். நிஷாந்தி ஜயசிங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென திருப்தியுற்று, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக "தொல்லியல் தேவைகளுக்கான ஒதுக்கிடம்" ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கே. ஏ. டி. ஆர். நிஷாந்தி ஜயசிங்க,**
தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி,

கொழும்பு,
2022, திசெம்பர் 27.

1A – G41226 – 07 (2024/01)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

தொல்லியல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரஸ்னக வெவ நிலப் பிரதேசம்

வடமத்திய மாகாணம்,, அனுராதபுர மாவட்டத்தில் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 118 ரஸ்னக வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள விஹாரகந்த கெல என அழைக்கப்படும் இடத்திற்கு நில அளவையாளர் தலைமையதிபதியினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட முடிவுறுத்தப்பட்ட கிராம வரைபடம் (மு.கி.ப) F.V.P. 1732 என இலக்கமிடப்பட்ட பகுதியிலிருந்து பிரித்து வேறுபடுத்தப்பட்டு 2020.08.28 ஆந் திகதியிடப்பட்டதும் சுவடு வரைபட இல. AA/DSO/2020/360 என இலக்கமிடப்பட்டதுமான முடிவுறுத்தப்பட்ட கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டு இல. A எனப் பெயரிடப்பட்ட முடிவுறுத்தப்பட்ட கிராம வரைபடம் இல. F.V. P. 1732 இல் குறிப்பிடப்பட்டுள்ள இல. 10, 30 மற்றும் 32 ஆகிய இடங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்ட அளிவில் இருபத்தியிரண்டு தசம் பூச்சியம் எழு பூச்சியம் ஆறு ஹெக்டயர் (22.0706 ஹெக்டயர்) அளவான நிலப்பரப்பாகும்.

EOG 01-0091